**செய்தி வெளியீடு எண்:412** **நாள்: 30.06.2017**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா உரை

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, பொன்மனச் செம்மல் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு அலை கடலென கூடியிருக்கிற உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். இது வரலாற்றில் பதிவு செய்யக்கூடிய விழாவாக நான் கருதுகிறேன்.

இம்மகத்தான விழாவிற்கு தலைமை ஏற்று
தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு.**ப.தனபால்** அவர்களே!
சிறப்புரை ஆற்றிய
மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **மு.தம்பிதுரை** அவர்களே!
முன்னிலை வகிக்கின்ற மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.**செல்லூர் கே.ராஜு** அவர்களே!
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
திரு.**ஆர்.பி. உதயகுமார்** அவர்களே!
மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர்
திரு.**பொள்ளாச்சி வி.ஜெயராமன்** அவர்களே!
அரசு தலைமைக் கொறடா
திரு.**எஸ்.இராஜேந்திரன்** அவர்களே!
வரவேற்புரையாற்றிய தலைமைச் செயலாளர்
முனைவர் **கிரிஜா வைத்தியநாதன்** அவர்களே!
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. **திண்டுக்கல் சி.சீனிவாசன்** அவர்களே!
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திரு. **கே.ஏ.செங்கோட்டையன்** அவர்களே!
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்
திரு.**பி.தங்கமணி** அவர்களே!
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் திரு. **எஸ்.பி.வேலுமணி** அவர்களே!
மாண்புமிகு நிதி மற்றும் மீன்வளத்துறை அமைச்சர்

திரு. **டி.ஜெயக்குமார்** அவர்களே!
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
திரு. **சி.வி. சண்முகம்** அவர்களே!
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்
திரு. **கே.பி.அன்பழகன்** அவர்களே!
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்
டாக்டர் **வி.சரோஜா** அவர்களே!
மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
திரு. **எம்.சி.சம்பத்** அவர்களே!
மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர்
திரு. **கே.சி.கருப்பணன்** அவர்களே!
மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
திரு. **ஆர்.காமராஜ்** அவர்களே!
மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்
திரு. **ஓ.எஸ். மணியன்** அவர்களே!
மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர்
திரு. **உடுமலை கே.ராதாகிருஷ்ணன்** அவர்களே!

மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர்
டாக்டர் **சி.விஜயபாஸ்கர்** அவர்களே!
மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர்
திரு. **இரா.துரைக்கண்ணு** அவர்களே!
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. **கடம்பூர் ராஜு** அவர்களே!
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
திரு. **வெல்லமண்டி என்.நடராஜன்** அவர்களே!
மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்
திரு. **கே.சி.வீரமணி** அவர்களே!
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
திரு. **கே.டி.ராஜேந்திர பாலாஜி** அவர்களே!
மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர்
திரு. **பா.பெஞ்சமின்** அவர்களே!
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
டாக்டர் **நிலோபர் கபில்** அவர்களே!
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. **எம்.ஆர்.விஜயபாஸ்கர்** அவர்களே!
மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. **எம்.மணிகண்டன்** அவர்களே!
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்
திருமதி. **வி.எம்.ராஜலட்சுமி** அவர்களே!
மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்

திரு. **ஜி.பாஸ்கரன்** அவர்களே!
மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. **சேவூர் எஸ்.ராமச்சந்திரன்** அவர்களே!
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
திரு. **எஸ்.வளர்மதி** அவர்களே!
மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. **பி. பாலகிருஷ்ணா ரெட்டி** அவர்களே!
மாண்புமிகு தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. **என். தளவாய் சுந்தரம்** அவர்களே!
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி **பா.வளர்மதி** அவர்களே!
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!
நன்றியுரை ஆற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.**கொ.வீரராகவராவ்**, அவர்களே!
வாழ்த்துரை வழங்கும்
நாடாளுமன்ற உறுப்பினர்களே!
சட்டமன்ற உறுப்பினர்களே!
கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகத் தொண்டர்களே!
அரசு அலுவலர்களே,
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,
வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,
இளைஞர்களே! மாணவ மாணவிகளே!
நலத்திட்டப் பயனாளிகளே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

‘‘மக்களோடு பழகி, மக்களோடு வாழ்ந்து,
மக்களுக்காக உழைத்து, மக்களுக்கு வாரி வழங்கி,
மக்களுக்காகச் சிந்தித்து,
“மக்கள் திலகமாய், ‘மன்னாதி மன்னனாய்’,
வாழ்ந்து மறைந்த புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்களைத்தான்,
இன்று இலட்சோப இலட்சம் தமிழ் மக்கள்,
தங்கள் இதயக் கோயிலில்
தங்க சிம்மாசனமிட்டு அமர்த்தி மகிழ்கிறார்கள்.
அவர் மக்களிடம் காட்டிய அன்பும், பரிவும்
மக்கள் அவரிடம் காட்டிய ஆர்வமும், பாசமும்,
உலக வரலாறு காணாத அற்புதங்கள்”

என்று மாண்புமிகு இதய தெய்வம்
புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புகழப்பெற்ற,
புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின்
நூற்றாண்டு விழாவை
வரலாற்று சிறப்பு மிக்க மதுரை மாநகரில்
தமிழ்நாடு அரசின் சார்பாக தொடங்கி வைத்தது
மாண்புமிகு அம்மா அவர்களின்
ஆசியால் எனக்கு கிடைத்த பெரும் பாக்கியமாக கருகிறேன்.

புரட்சித் தலைவரின் நூற்றாண்டு விழாவை
மதுரையில் தொடங்குவது என்பது
மிகவும் பொருத்தமானதாகும்.
மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும்
புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கும்
மதுரையோடு நிறைய தொடர்புகள் உண்டு,
என்றாலும் மிக முக்கியமான ஒருசில
சம்பவங்களை மட்டும் இங்கு நான்
நினைவுகூர விரும்புகிறேன்.
புரட்சித் தலைவர் அவர்கள் இலங்கை கண்டியில்
17.01.1917ல் தந்தை கோபால மேனனுக்கும்
தாய் சத்யபாமாவுக்கும்
ஐந்தாவது குழந்தையாக பிறந்தார்.
கும்பகோணத்தில் தொடக்கக்கல்வியை
தொடங்கிய எம்.ஜி.ஆர். அவர்கள்
தன் குடும்ப வறுமையின் காரணமாக
படிப்பை தொடர முடியாமல்
ஏழாவது வயதிலேயே
மதுரை ஒரிஜினல் பாய்ஸ் நாடகக் கம்பெனியில்
வேலைக்கு சேர்ந்தார்.
எனவே, அவருடைய வாழ்க்கை மதுரையோடு
தொடர்புடையதாக அமைந்தது.
அதனால்தான் அவர் திரைவானில்
ஒளிவீசிக் கொண்டிருந்தபோது
மதுரை வீரன், மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்
போன்ற படங்களில் நடித்தார்.

1985 பிப்ரவரி 12ஆம் நாள்
எம்.ஜி.ஆர். மறுபிறவி எடுத்து
அமெரிக்காவில் இருந்து மீண்டும் இந்தியா திரும்பினார். அவர் சாதாரணமாக
திரும்பவில்லை,

அமெரிக்காவில் சிகிச்சையில் இருந்தபடியே
மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்று,
முதலமைச்சர் நிலையில்
மீண்டும் தமிழ் மண்ணில் கால் வைத்தார்.
எனவே, மதுரை மாவட்டம் அரசியலில்
புரட்சித்தலைவரை மறு அவதாரம் எடுக்கக்
காரணமாக இருந்தது.
1986 ஜூலை 14, 15இல்
இதே மதுரை மாநகரில் எம்.ஜி.ஆர்
மன்ற மாநாடு நடத்த புரட்சித் தலைவர் ஆணையிட்டார்.
அந்த மாநாட்டில்தான்
ஆறடி உயர வெள்ளி செங்கோல் ஒன்றினை
தலைமைக்கழகத்தின் சார்பில்
புரட்சித்தலைவர் அவர்களுக்கு அளிக்கும் வாய்ப்பு
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களுக்குக் கிடைத்தது.
அந்த வெள்ளிச் செங்கோலை,
அதே மேடையில், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடமே திருப்பி அளித்த போது
மாநாட்டில் திரண்டிருந்த மக்கள் எழுப்பிய
கரவொலி விண்ணைத் தொட்டது.
இதை அம்மா அவர்கள் அடிக்கடி நினைவு கூர்ந்து
பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள்.
இதுவே அம்மா அவர்களை
எம்.ஜி.ஆர் அவர்களுக்குப் பிறகு
அரசியல் வாரிசாக, கழகத்தின் அடுத்த தலைவராக
அடையாளம் காட்டிய நாளாக அமைந்தது.
அதனால் கழகத்தின் வரலாற்றிலும்,
புரட்சித் தலைவரின் வாழ்விலும்,
அம்மா அவர்களின் இதயத்திலும்
மதுரை மாநகரம் நீங்காத இடத்தைப் பிடித்தது.
மாண்புமிகு அம்மா அவர்களின்
அரசியல் வாழ்க்கையில் இந்த நிகழ்வு
ஒரு பெரிய திருப்புமுனையாக அமைந்தது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடித்துக்
கடைசியாக வெளிவந்த திரைப்படம்
மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்.
இந்தப்படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போதே
தமிழ்நாட்டை தி.மு.க.விடமிருந்து மீட்டு

தமிழ் நாட்டின் முதலமைச்சராக
புரட்சி அவதாரம் எடுத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

ஒரு தலைவர் மறைந்து 30 ஆண்டுகளுக்குப்
பிறகும் அவர் மக்கள் மனதிலே பசுமையாக
நிறைந்திருக்கிறார் என்பதற்கு
எடுத்துக்காட்டாக இந்த மாபெரும் கூட்டத்தை விட
வேறு எதைச் சொல்ல முடியும்?

மதுரையில் கடல் இல்லையென்ற குறையை..
இந்த மக்கள் கடல் தீர்த்து வைத்திருக்கிறது.
இந்த கண்கொள்ளாக் காட்சியையும்
கழக தொண்டர்களின் கடலளவு
கூட்டத்தையும், எழுச்சியையும்
பார்ப்பதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி
அம்மா அவர்கள் நம்மிடையே இல்லை என்ற
ஒரு பெருங்குறைதான் கழகத்தொண்டர்களை வாட்டுகிறது.

புரட்சித் தலைவரின் நூற்றாண்டு விழாவை
எப்படியெல்லாம் கொண்டாட வேண்டும்
என்று அம்மா அவர்கள் திட்டமிட்டு இருந்தார்களோ,
அதில் சிறிதளவு கூட குறைவு இல்லாமல்
அம்மாவின் பிள்ளைகளாகிய நாங்கள்
தமிழ்நாடு முழுவதும்
இந்த விழாவை கொண்டாட முடிவு செய்திருக்கிறோம்.

மதுரையில் தொடங்கி
சென்னையில் நிறைவடைவது போல்
திட்டமிடப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் மாநிலம் முழுவதும் சிறப்பாக நடத்த
ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இந்த மாபெரும் தொடக்க விழாவின் வாயிலாக
கழக கண்மணிகளுக்கு கழக வரலாற்றில்
புரட்சித்தலைவரின் பங்களிப்பை பற்றி
சுருக்கமாக கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1944ல் திராவிட கழகம் தோன்றியது.
1949ல் செப்டம்பர் 17ம் நாள்
பேரறிஞர் அண்ணா அவர்கள்
திராவிட முன்னேற்றக் கழகத்தைத்
தோற்றுவித்தார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்த போது
ஆட்சிக்கட்டிலில் அமர வேண்டும் என்ற எண்ணம்
பேரரறிஞர் அண்ணா அவர்களுக்கு துளியும் இல்லை.
எதிர் கட்சி நிலையில் இருந்தால்தான்
மக்களுக்கு வேண்டிய உரிமைகளையும்
வசதிகளையும் உடனுக்குடன் ஆளுங்கட்சியினரிடம்
கேட்டுப் பெற முடியும் என்று நினைத்தவர்
அறிஞர் அண்ணா அவர்கள்.
ஆனால், 1953ல் காங்கிரஸில் இருந்து
கழகத்தில் வந்து இணைந்த
எம்.ஜி.ஆர். அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தை
ஒரு வெகுஜன இயக்கமாக உருவெடுக்கச் செய்தார்.

எனவேதான் பேரறிஞர் அண்ணா அவர்கள்
தன்னுடைய முடிவை மாற்றிக் கொண்டு
1958ல் திருச்சியில் நடந்த கழக மாநாட்டில்
கழகம் தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்கினார்.

அண்ணா அவர்களின் அறிவுக் கூர்மையினாலும்,
புரட்சித் தலைவரின் அன்பான அணுகுமுறையாலும்,
திராவிட முன்னேற்றக் கழகம்
தமிழர்களின் மனதில் வேரூன்ற ஆரம்பித்தது.
அதன் தொடர்ச்சியாக, 1947–லிருந்து
1967ம் ஆண்டு வரை
20 ஆண்டுகள் தமிழ்நாட்டை ஆண்ட
காங்கிரஸ் கட்சியை தோற்கடித்து,
திராவிட இயக்கம் தமிழ்நாட்டின்
ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தது.
எனவே, திராவிட முன்னேற்றக் கழகம்
தமிழ்நாட்டில் வேரூன்றி வளர்வதற்கு
அடிவேர்களில் ஒன்றாக டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்
விளங்கினார்கள் என்பதை இங்கே
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டே வருடங்களில்
பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்து விட்டார்கள் .
தமிழ்நாட்டுக்கு என்னவெல்லாம்
செய்ய வேண்டும் என்று
அண்ணா அவர்கள் கனவு கண்டிருந்தாரோ
புரட்சித் தலைவரோடு கலந்து ஆலோசித்தாரோ
அதையெல்லாம் செய்து காட்ட வேண்டும்

என்று புரட்சித் தலைவர் அவர்கள் எண்ணினார்கள்.
தன் எண்ணங்களை எல்லாம் தன் திரைப்படங்கள்
மூலமாக மக்களுக்கு தெரிவித்தார்கள்.

"நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்
இங்கு ஏழைகள் வேதனை படமாட்டார்
உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை – அவர்
கண்ணீர்க் கடலிலே விழமாட்டார்"

போன்ற பல புரட்சிப் பாடல்களை
தமிழர் நெஞ்சங்களில் விதைத்து,
புரட்சி எண்ணங்களை
மக்களுக்கு சென்றடையச் செய்தார்.
மக்களைக் கவரும் வகையில் தனது
படங்களுக்கு தலைப்புகளை வைத்தார்.
அவர் நடித்து வெளிவந்த 136 படங்களும்
சமுதாய சிந்தனைகளுடன் கூடிய புதுப்புது
செய்திகளைக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தியது.
சமுதாயத்தின் அடித்தட்டு மக்களையே மையமாக கொண்டு தலைப்புகள், வசனங்கள்
மற்றும் பாடல்கள் அமைந்தன.
வரலாற்றை கி.மு., கி.பி. என்று பிரிப்பதைப்போல
சுதந்திர இந்தியாவின் அரசியலையும்,
ஆட்சி முறையையும் எம்.ஜி.ஆருக்கு முன், எம்.ஜி.ஆருக்குப் பின் என்று
இரண்டாகப் பிரிக்கலாம் என்று
மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிடுவார்கள்.
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய
ஆட்சிக்குப் பின்னர் தான்
ஒரு சாதாரண தனி மனிதனை முன் வைத்து
திட்டங்களைத் தீட்ட ஆரம்பித்தனர்.

முதலமைச்சராக பொறுப்பேற்று
ஆட்சி நடத்திய 10 ஆண்டுகளில்
மக்களுக்காக கொண்டு வந்த திட்டங்கள் ஏராளம்.
அந்த திட்டங்கள் அத்தனையும் இங்கே
குறிப்பிட வேண்டும் என்றால் நேரம் போதாது.
அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டம்,
விதவை, ஆதரவற்ற பெண்களுக்கு திருமண உதவி,
தாலிக்குத் தங்கம் வழங்குதல்,

மகளிருக்கு சேவை நிலையங்கள்,
பணிபுரியும் பெண்களுக்கு தங்கும் விடுதிகள்,
தாய் சேய் நல இல்லங்கள்,
இலவச சீருடை வழங்கும் திட்டம்,
இலவச காலணி வழங்கும் திட்டம்,
இலவச பற்பொடி வழங்கும் திட்டம்,
இலவச பாடநூல் வழங்கும் திட்டம்,
வறட்சிக் காலத்தில் லாரிகள் மூலம்
குடிநீர் வழங்கும் திட்டம்,
அரிசி விலை குறைப்பு
மாற்றுத் திறனாளிகளுக்கான நல திட்டங்கள்
இலவச ஆம்புலன்ஸ் திட்டம்
முதியோர்களுக்கு மாதந்தோறும்
உதவித்தொகை வழங்கும் திட்டம்,
இன்னும் பல திட்டங்கள் டாக்டர் புரட்சித் தலைவர்
அவர்களால் கொண்டுவரப்பட்டன.
டாக்டர் எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டம் பற்றி ஐ.நா.சபையில் 158 நாடுகளின் மத்தியில்
அண்ணன் பண்ருட்டி எஸ்.ராமச்சந்திரன்
அவர்கள் பேசினார்கள்.
பன்னாட்டுத் தலைவர்கள் வியந்து
சபையில் கரகோஷம் எழுப்பி பாராட்டினார்கள்.
அதற்கு முன்பு வரை பிரதமர்களின் பெயர்களும்,
வெளியுறவுத்துறை அமைச்சர்களின்
பெயர்களும்தான் ஐ.நா. சபை பதிவேட்டில் இடம் பெற்றிருந்தது. சத்துணவுத் திட்டத்தின் மூலமாக
முதன்முதலில் புரட்சித் தலைவர் அவர்களின்
பெயர் ஐ.நா. சபை ஏட்டில் பதிவானது.

1981ல் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை
மதுரையில் புரட்சித் தலைவர் அவர்கள்
உலகமே வியக்கும் அளவிற்கு
வெற்றிகரமாக நடத்தினார்கள்.
அப்போது முச்சங்கம் வைத்து
தமிழ் வளர்த்த இந்த மதுரையில்
உலகத் தமிழர்களை ஒரே குடையின் கீழ் கொண்டுவர
மதுரையில் உலக தமிழ்ச் சங்கம்
அமைப்போம் என்று அறிவித்தார்கள்.
மாண்புமிகு அம்மா அவர்கள்
புரட்சித்தலைவரின் கனவுத் திட்டமான

உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு புத்துயிர் கொடுக்கும் விதமாக 37 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
மதுரையில் பெருந்திட்ட வளாகமாக
உலகத் தமிழ்ச் சங்கத்தை எழுப்பி வைத்தார்கள்
என்பதை பெருமையோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
அதே போல 1981ல் புரட்சித் தலைவர் அவர்கள்
தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவ
ஆணையிட்டு.. அது தமிழ்க்கோட்டமாகவும்
தமிழர்களின் பண்பாட்டுக் கூடமாகவும்
விளங்கிக் கொண்டிருக்கிறது.
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
அகில இந்திய அ.தி.மு.க.வை இந்திய மண்ணில்
வேரூன்ற எத்தனை போராட்டங்களையும்
தியாகங்களையும் செய்தார்கள் என்பது
ஒவ்வொரு கழகத் தொண்டருக்கும்
தெரிந்திருக்க வேண்டும்.
புரட்சித் தலைவருக்குப் பிறகு
கழகத்தை ஒரு தாயைப்போல
கட்டிக் காப்பாற்ற, புரட்சித் தலைவி
அம்மா அவர்கள் எத்தனை இன்னல்களையும்,
அவமானங்களையும் சந்தித்தார்
என்பதையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
பேரறிஞர் அண்ணாவின்
இதயக்கனியை கன்றிவிடும்படி
கல்லால் அடித்தவர்களும்,
சொல்லால் அடித்தவர்களும் எத்தனை பேர்!
அவர்களை எதிர்த்து கழகத்திற்கு
உள்ளேயும் வெளியேயும்
புரட்சித் தலைவர் நடத்திய போராட்டங்கள் எத்தனை?

1967ல் புரட்சித் தலைவர் துப்பாக்கியால்
சுடப்பட்டபோது அதை அறிந்து நாடே பதறியது.
தாய்க்குலம் அழுது புலம்பியது.
இளைஞர் கூட்டம் கொந்தளித்தது.
அப்பொழுதும் அவர் விரோதிகள் என்ன சொன்னார்கள் தெரியுமா? முடிந்தது எம்.ஜி.ஆர். கதை
இனி மேல் அவர் பிழைக்க மாட்டார்
என்று சிலர் அற்ப மகிழ்ச்சி கொண்டார்கள்.
எம்.ஜி.ஆரின் தொண்டைக்கருகில்
பாய்ந்த குண்டு அகற்றப்பட்டது என்று

மறுநாள் வந்த செய்தி அனைவரையும்
வியப்பில் ஆழ்த்தியது.
அப்போது அவர் எதிரிகள் என்ன சொன்னார்கள்?
பிழைத்து எழுந்தாலும் அவரால்
முன்போலப் பேச முடியாது,
பேச முடியாவிட்டால் எப்படி நடிக்க முடியும்?
என்று கூறி தங்கள் அற்பமான மகிழ்ச்சியை
சிலர் காட்டிக் கொண்டார்கள்.
உயிரற்ற ஒரு துப்பாக்கி தோட்டாகூட
ஒரு நல்லவரை நோக்கி நாம் பாய்கிறோமே
என்று உணர்ந்து தன் வேகத்தைக் கட்டுப்படுத்தி
பக்கவாட்டில் பாய்ந்தது.
அவரை விட்டு பிரிய மனமில்லாமல்
அவர் கழுத்திலேயே தங்கியது என்று
மறைந்த மாண்புமிகு முன்னாள் அமைச்சர்
திரு. கா. காளிமுத்து அவர்கள்
ஒரு கூட்டத்தில்  பேசினார்கள்.
தன்னைக் கொல்ல வந்த தோட்டாவுக்கும்
தன் கழுத்தில் இடம் கொடுத்தவர்
புரட்சித் தலைவர் அவர்கள்.

1972ஆம் ஆண்டில்
எம்.ஜி.ஆர். கட்சியை விட்டுத் தூக்கி எறியப்பட்டார்.
அவர் செய்த தவறு,  கட்சிக் கணக்கைக் கேட்டதுதான்.
அதனால் கட்சித் தலைமை சீறியது.
அவரைக் கட்சியில் இருந்து தற்காலிக நீக்கம் செய்தது.
பின்னர் நிரந்தரமாகவே
நீக்கிவிட்டதாகவும் அறிவித்தது!
அப்பொழுதும் அவர் எதிரிகள் என்ன சொன்னார்கள்?
இன்றோடு முடிந்தது எம்.ஜி.ஆரின் அரசியல் வாழ்வு”
என்று கொக்கரித்தார்கள்.
கட்சியால் எம்.ஜி.ஆர். வளர்ந்தாரா?
எம்.ஜி.ஆரால் கட்சி வளர்ந்ததா?
என்று பத்திரிகைகளும்
அரசியல் கட்சிகளும் ஆராய்ச்சி நடத்தின.
ஆனால், எம்.ஜி.ஆர். நிலை என்ன?
எம்.ஜி.ஆர். மீண்டும் இமயம் போல் எழுந்து நின்றார்.

புரட்சி நடிகர் புரட்சித் தலைவராக மாறினார்.
அண்ணாவின் பெயரால்

அரசியல் கட்சியைத் தொடங்கி,
ஐந்தே ஆண்டுகளில்
கடுமையான அடக்குமுறைகளையும், மீறி,
கட்சியை வளர்த்தார்.
ஆனால் அந்த ஐந்தாண்டுகளுக்குள்
அவர் சந்தித்த போராட்டங்கள் எண்ணற்றவை.
புரட்சித் தலைவர் தன் சுயவாழ்க்கையில்
செய்த தியாகங்கள்தான்
அவரை பொதுவாழ்க்கையில் புனிதராக உயர்த்தியது.
அவருடைய தியாகங்கள் மட்டுமே
அவருக்கு இத்தனை பெரிய வளர்ச்சியைத்
தந்துவிடவில்லை.
அவருக்கு இயற்கையிலேயே அமைந்திருந்த
குணாதிசயங்களும், வள்ளல் தன்மையும்தான்
அவரை மிகச்சிறந்த தலைவராக
மக்கள் மனதில் இடம்பெறச் செய்தது.

கடையேழு வள்ளல்கள் அள்ளி அள்ளி கொடுத்தார்கள்
என்று நாம் இலக்கியங்களில் படித்திருக்கிறோம்.
ஆனால், இந்த நூற்றாண்டில்
தம்மிடம் உதவி கேட்டு வந்தவர்களுக்கு
குறிப்பறிந்து, தன் பையில் கைவிட்டு எண்ணிப்பார்க்காமல்
இருப்பதை அப்படியே அள்ளிக் கொடுத்தவர்
நமது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்பதை
கண்கூடாக பார்த்தவர்கள் நம்மிடையே பலர் உண்டு.
தமது ராமாவரம் வீட்டிற்கு வந்தவர்களுக்கு
எந்தநேரமும் பசியின்றி உணவளிக்க
எப்போதும் அடுப்பு எரிந்து கொண்டிருந்ததை
நம்மில் பலர் பார்த்திருக்கிறோம்.
எட்டாவது வள்ளல் நமது புரட்சித் தலைவர்
என்றால் அது மிகையில்லை.
மழையைக் காட்டிலும் சிறந்த
கொடையில்லை என்பார்கள்.
அந்த மழையைக் காட்டிலும் டாக்டர் எம்.ஜி.ஆர்
சிறந்த வள்ளலாகத் திகழ்ந்தார்.

புரட்சித் தலைவர் தனது உழைப்பால் வந்த
வருவாயைக் கொண்டு,
அடையாறு பகுதியில், தனது தாயின் பெயரால்
சத்யா ஸ்டுடியோவை உருவாக்கினார்.
ஆனால், அந்த ஸ்டுடியோவின் முதலாளிகள்

யார் தெரியுமா? அவரிடம் பணியாற்றிய
தொழிலாளர் தோழர்கள்தான்!

ரஷ்ய நாட்டில் ஆகட்டும், அல்லது
கம்யூனிசம் பரவிய பிற நாடுகளில் ஆகட்டும்,
தனி மனிதன் உழைப்பால், தான் ஈட்டிய பொருளால்
உருவான ஒரு நிறுவனத்தை,
அதுவும் அப்போதே பல லட்சங்கள்
இப்போது பல கோடிகள் பெறுமானமுள்ள
ஒரு பெரிய நிறுவனத்தை,
தொழிலாளர்களுக்கு சமபங்காக உரிமை எழுதி வைத்த
ஒரு சமதர்மவாதியை,
உண்மைப் பொதுவுடைமைவாதியை,
உலகத் தலைவர்களிலே யாரையாவது,
ஒருவரைக் காட்ட முடியுமா?
காட்ட முடியும் என்றால் அவர் எம்.ஜி.ஆர். ஒருவர்தான்
என்பதை இந்த நேரத்தில் ஆணித்தரமாக
நான் கூறுவேன்.

‘‘வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி,
மக்களின் மனதில் நிற்பவர் யார் **?**’’
என்ற கேள்வியை மக்கள் முன் எழுப்பினால்
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்....
என்றுதான் பதில் வரும், என்று
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறினார்கள்.

கழகத்தை உருவாக்கிய புரட்சித் தலைவருக்கும்
அவருக்குப்பின் கழகத்தை கட்டிக் காப்பாற்றிய
புரட்சித் தலைவிக்கும் இருந்த
புகழ் இன்னும் பல நூற்றாண்டுகள்
அகில இந்திய அண்ணா தி.மு.க.வை
தமிழ் மண்ணிலே நிலை நிறுத்தும்.
எனவே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும்
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும்
உழைத்து உருவாக்கி வளர்த்த கழகத்தை
காப்பாற்ற ஒவ்வொரு கழக தொண்டனுக்கும்
கடமை உண்டு.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இன்னும்

பல ஆண்டுகள் வாழ்ந்திருந்தால்
தமிழ்ச் சமூகத்திற்கு என்னவெல்லாம் தொண்டு
ஆற்றியிருப்பாரோ, அவற்றையெல்லாம்
செய்து முடிப்பதற்காகத்தான்
இந்த மாபெரும் இயக்கத்தை புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் தன்னுடைய கரங்களில்
விட்டுச் சென்றதாக மாண்புமிகு அம்மா அவர்கள்
2011–ல் கழகத் தொண்டர்களுக்கு
எழுதிய மடலில் உருக்கமாக எழுதியிருந்தார்கள்.
அதனால்தான் அணைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தை வெல்வதற்கு
இன்னொரு இயக்கம் இம்மண்ணில் இல்லை
என்னும் அரசியல் பொற்காலத்தை
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
உருவாக்கினார்கள்.
'நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்'
'இப்படை தோற்கின் எப்படை வெல்லும் ?'
என்னும் புரட்சித் தலைவரின் வைர வரிகளை
இன்னும் பட்டைத் தீட்டி
'எப்படை வரினும் இப்படையே வெல்லும்'
என்னும் கம்பீர நிலைக்கு கழகத்தை
உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மக்கள் உங்களிடம் வருவதற்குப் பதிலாக
நீங்கள் சேவகனைப் போல
மக்களிடம் செல்ல வேண்டும்.
பேரறிஞர் அண்ணாவின் பேச்சு !
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் வசீகரம் !
மாண்புமிகு அம்மாவின் உழைப்பு !
இவைதான் கழகக் கொடியின்
மூன்று வண்ணங்களாக நமக்குத் தெரிய வேண்டும்.
புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி அவர்களும் சொன்ன
அறிவுரைகளை எல்லாம்
மந்திரங்களாக மனத்திலே இருத்தி ஒற்றுமையாக
ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து
சகிப்புத்தன்மையோடு கழகத்தில்
பணியாற்ற இந்த இனிய நேரத்திலே
உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.
இன்றிலிருந்து பேச்சைக் குறைத்துக் கொண்டு
செயலில் இறங்குங்கள்.

இதைக் கூறுகிற போது எனக்கு ஒரு கதை
நினைவுக்கு வருகிறது.
அக்பர், ஒரு நாள்
ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த அரசவையில்,
ஒரு கேள்வியைக் கேட்டார்.
‘அமைச்சரே, உலகத்திலேயே எல்லோராலும்
வெறுக்கத் தக்க கெட்ட பொருள் எது?’
அதற்கு அமைச்சர் பீர்பால்,
‘அரசே! உலகத்திலேயே மிகவும் கெட்ட பொருள்
நமது நாக்குதான்’ என்றார்!
நாக்கா.. எப்படி?’என்று ஆச்சரியத்தோடு கேட்டார் அரசர்.
அதற்கு பீர்பால், ‘அரசே! இந்த நாக்குதானே,
இல்லாததையும் பொல்லாததையும் பேசி
மற்றவர்களை குறை கூறிக் கொண்டிருக்கிறது.
வீண்வம்பு பேசுகிறது;
வீண் சண்டை இழுக்கிறது!’ என்றார்.
அக்பர் உட்பட
அவையில் கூடியிருந்த அனைவருமே
சரியான விடை என்று பாராட்டினார்கள்.
அடுத்த நாள் சபை கூடியது.

மன்னர் அக்பர் அன்றைக்கும்
ஒரு கேள்வியைக் கேட்டார்.
‘அமைச்சரே!
உலகத்திலேயே மிகவும் நல்ல பொருள் எது?’
‘அரசே! உலகத்திலேயே
மிகவும் நல்ல பொருள் நாக்கு!’ என்றார் பீர்பால்.
அக்பர் உட்பட அவையோர்
அனைவரும் வியந்து போனார்கள்.
அக்பர், ஆச்சரியத்தோடு கேட்டார்:
‘அமைச்சர் பீர்பால் அவர்களே,
நேற்று உலகத்திலேயே கெட்ட பொருள்
நாக்கு என்றீர்கள். அதற்கு நல்ல விளக்கமும் தந்தீர்கள்!
இன்று அதே நாக்கே, உலகத்திலேயே நல்ல பொருள்
என்கிறீர்கள். அது எப்படி?’ என்று கேட்டார்.
அதற்கு பீர்பால், ‘அரசே!
தீயவைகளைப் பேசும் அதே நாக்கு
நல்லவைகளைப் பேசினால்,
எல்லோரும் இந்த நாக்கைப் புகழ்ந்து
பாராட்டத்தானே  செய்வோம்.

கோபம், சண்டை போன்ற தீயவைகளைப் பேசாமல்,
அன்போடு பேசினால், பாசத்தோடு பேசினால்,
நேசத்தோடு பேசினால், அப்படிப் பேசும் நாக்கை
உலகத்திலேயே சிறந்த பொருள்
என்று சொல்லாமல், வேறென்னவென்று சொல்வது?'
என்று நாக்கை புகழ்ந்து பேசினார்.

உண்மைதானே! ஒரு நாக்கை வைத்து,
நல்லது பேசுவதும், கெட்டது பேசுவதும்,
நம் கையில்தான் இருக்கிறது.
எனவே, நம் நாக்கை என்றும் பேணிக்காத்து,
நல்லவைகளையே பேசப் பழகிக் கொள்ள வேண்டும்.

**ஆயிரத்தில் ஒருவனா**க, **மன்னாதி மன்ன**னாக,
**தனிப்பிறவி**யாக, **நினைத்ததை முடிப்பவ**னாக,
**மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன**ாக,
**மதுரை வீரன**ாக,
எல்லோரும் விரும்பும் **ஆசைமுகம**ாக
**அன்னமிட்டகை**யாக, **தர்மம் தலைகாத்**து
**நீதிக்குத் தலைவணங்**கி,
**நம் நாட்**டுக்காக, **உரிமைக் குரல்** எழுப்பி
**ஊருக்கு உழைப்பவ**னாக வாழ்வதே
**என் கடமை** என்றும், நாம் எல்லோரும்
**ஒருதாய் மக்கள்** என்றும், **நாளை நமதே** என்றும்
**சங்கே முழக்**கமிட்ட
கழகத்தின் **கலங்கரை விளக்கம்,**
**ஆனந்த ஜோதி**
கழகத் தொண்டர்களின் **குடியிருந்த கோயில்,**
**புதிய பூமி**யை மலரச் செய்த
அறிஞர் அண்ணாவின் **இதயக்கனி**
மக்களின் **இதய வீணை,**
**நேற்று இன்று நாளை** என முக்காலமும்
மக்கள் மனதில் வாழும் **தலைவன்,**
**எங்கள் வீட்டுப் பிள்ளை, எங்கள் தங்கம்,**
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
**தாயைக் காத்த தனயன**ாக,
**தாய்சொல்லைத் தட்டாதே** என்றும்,
**சிரித்து வாழ வேண்டும்** என்றும்,
**திருடாதே** என்றும்,

**நீதிக்கு பின் பாசம்** என்றும்
அறிவுரை கூறிய **குடும்பத்தலைவன்**
டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்.
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால்
தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்ட **பரிசு** தான்
**சக்கரவர்த்தி திருமகள்**
**கலையரசி, மகாதேவி**
புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

இன்று மாண்புமிகு அம்மா அவர்கள்
நமக்கெல்லாம் **தெய்வத்தாய**ாக இருந்து
நம்மை வழிநடத்தி வருகிறார்கள்.
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் புகழும்
புரட்சித்தலைவி அம்மா அவர்களின் புகழும்
**பல்லாண்டு வாழ்க** என
இந்த **நல்ல நேரத்**தில் வாழ்த்துகிறேன்.

“திட்டங்களுக்காக மக்கள் அல்ல!
மக்களுக்காகத்தான் திட்டங்கள்”
என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கூறுவார்கள்.
திட்டங்கள் என்பது மக்களிடம் ஒரு
மாற்றத்தையும் முன்னேற்றத்தையும்
உருவாக்க வேண்டும்.
அப்படிப்பப்பட்ட திட்டங்களைத்தான்
புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி
அவர்களும் தீட்டினார்கள்.
இந்த இனிய விழாவில் மதுரை மாவட்டத்தின்
பொதுப்பணித் துறையின் சார்பில்
மதுரை ராஜாஜி மருத்துவமனையில்
கட்டப்பட்டுள்ள 40 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்கள் உள்ளிட்ட
51 கோடியே 14 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்
மதிப்பீட்டிலான திட்டங்களையும்,
மதுரை மாநகராட்சி சார்பில்
2 கோடியே 94 இலட்சம் ரூபாய்
மதிப்பீட்டிலான திட்டங்களையும்
தொடங்கி வைத்தும்,
2 கோடியே 77 இலட்சம் ரூபாய்க்கான
திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும்,
இந்துசமய அறநிலையத் துறை சார்பில்
ஒரு கோடியே 93 இலட்சம் ரூபாய்

மதிப்பீட்டிலான திட்டங்களையும்,
ஆவின் மற்றும் வேளாண்மைத்துறை சார்பில்
ஒரு கோடியே 52 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய்
மதிப்பீட்டிலான திட்டங்களையும் என
ஆக மொத்தம் இன்று
60 கோடியே 34 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய்
மதிப்பீட்டிலான திட்டங்களை தொடங்கி வைத்ததிலும்
அடிக்கல் நாட்டியதிலும்
நான் பெருமிதம் கொள்கின்றேன்.

இந்த பிரமாண்ட விழாவை வெற்றிகரமாக
நடத்திக் கொண்டிருக்கிற
அத்தனை நல்ல உள்ளங்களுக்கும்
உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்!

இன்றும் நமதே ! நாளையும் நமதே !
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ் !
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி!
வணக்கம்!

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (30.6.2017) பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு தொடக்க விழாவில் அறிவித்த சிறப்பு திட்டம்

---

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மதுரை மாநகராட்சியின் எதிர்கால குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு இன்னும் 60 ஆண்டுகளுக்கு மதுரை மாநகரில் குடிநீர் தட்டுப்பாடே நிலவக் கூடாது என்று தொலைநோக்கு திட்டத்தோடு அம்மா அவர்கள் விரும்பியபடி மாண்புமிகு புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் மிகவும் நேசித்த **மதுரை மாநகருக்கென சிறப்பு தனி குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்** என்பதை பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த திட்டம் சுமார் 156 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள பெரியார் அணை லோயர் கேம்ப் பகுதியிலிருந்து பெரிய ராட்சத குழாய்கள் மூலம் சுமார் 17 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும் என்பதை இந்த தருணத்தில் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * *

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (30.6.2017) பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு தொடக்க விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்பு

உலகப்புகழ் பெற்ற
மீனாட்சி அம்மன் எழுந்தருளி இருக்கும்
இம் மதுரை மண் -
மல்லிகைக்கும் பெயர் பெற்றது –
வீரத்திற்கும், விவேகத்திற்கும் மற்றும்
விசுவாசத்திற்கும் பெயர் பெற்றது
என்றால் அது மிகையல்ல

கழகம் ஆரம்பித்த நான் முதல் இன்று வரை,
புரட்சித்தலைவர் டாக்டர் எம்,ஜி,ஆர்,
புரட்சித்தலைவி அம்மா,
மற்றும்
அம்மா அவர்களின் வழியில்
செயல்படும் அம்மாவின் அரசிற்கு,

அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்ற கழகத்திற்கு,
விசுவாசமாக இருக்கும் மக்கள்
மதுரை மாவட்ட மக்கள்
என்பதை இத்தருணத்தில்
மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு
நூற்றாண்டு விழா நாயகர், மக்கள் தலைவர்,
முன்னாள் முதலமைச்சர், பாரத ரத்னா
டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களது
பெயரை சூட்ட வேண்டும் என்று

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. செல்லூர் ராஜு அவர்களும்,
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
திரு. உதயகுமார் அவர்களும்,
மதுரை மாவட்ட
சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும்
பொது மக்கள் அனைவரும்
விடுத்த கோரிக்கையினை
மாண்புமிகு அரசு
உடனடியாக ஏற்று,

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்-
மக்கள் தலைவராக –
தமிழகத்தின் முதலமைச்சராக

40 வருடங்களுக்கு முன்
அதாவது – 30.06.1977ல்
பதவியேற்ற இதே நன்னாளில்

**மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு**
**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம்**
**என்று பெயர் சூட்டப்படுகிறது**
**என்பதை இம்மேடையில் மகிழ்ச்சியுடன்**
**அறிவிப்பதில் பெருமை கொள்கிறேன்.**

* * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**